**நீலகிரி முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,**
**பிறப்பிப்பவர் – திரு. அ.நாசருதீன், எம்.எஸ்சி., எம்.எட்.,**

**மூ.மு எண். 3206 /அ1/2022 நாள். 24.05.2022**

***

பொருள்: பள்ளிக்கல்வித்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி இளநிலை உதவியாளர் பணிக்கு நேரடி நியமனம் – தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் குழு தொகுதி IV தேர்வு 2018 – 2019 மற்றும் 2019 – 2020 தேர்வாணையம் மூலம் நியமனம் –பணியினை வரன்முறைபடுத்தி ஆணையிடுதல் – சார்பு.

பார்வை : 1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் குழு செயலாளரின் கடிதம் எண் .2563/PSD /I2/ 2020 நாள்.21.07.2020.
2.நீலகிரி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், ந.க எண்.3978/ அ1/ 2020, நாள் 18.09.2020.
3.அரசாணை (நிலை) எண் 101 பள்ளிக்கல்வி (வரவு செலவு) த்துறை, நாள் 18 .05. 2018.
4.கோத்தகிரி வட்டாரக் கல்வி அலுவலரின் கடித ந.க.எண்.400/அ3/2022, நாள்.18.04.2022

***

ஆணை

பார்வை (1) – காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் செயலரது கடிதம் மூலம் இளநிலை உதவியாளர் பணிக்கு தேர்வாணையம் தொகுதி IV தேர்வு 2018 – 2019 மற்றும் 2019 – 2020 – இல் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு நேரடி நியமனம் வழங்கிட பள்ளிக்கல்வித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பார்வை (2) – இல் காணும் நீலகிரி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகளில் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் இளநிலை உதவியாளராக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணியில் கீழ்க்காணும் தனியருக்கு அவரது பெயருக்கு எதிரில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டது.

பார்வை (3) – இல் காணும் அரசாணையின் அதிகாரப்பரவலின் படி இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ள தனியருக்கு அன்னாரது பணியை வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படுகிறது–

| வ. எண் | பணியாளர் பெயர் / பதவி | நியமனம் செய்யப்பட்ட அலுவலகம்/ பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | செல்வி.சு.சுரேகா, இளநிலை உதவியாளர் | வட்டாரக் கல்வி அலுவலகம், கோத்தகிரி, நீலகிரி மாவட்டம் | 21.09.2020 மு.ப முதல் | -- |

மேற்கண்ட தனியர் பணி வரன்முறைப்படுத்தப்பட்ட நாள் முதல் மூன்றாண்டுகள் தொடர் பணிக்காலத்தை இரண்டாண்டுகளில் தகுதிகாண் பருவத்தில் தொடர்ச்சியாக பணியாற்றி தனது தகுதிக்காண் பருவக்காலத்தினை நிறைவு செய்து கொள்ளப்பட வேண்டும்.

தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் அடிப்படை பயிற்சியினையும், தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் தேர்வும் கண்டிப்பாக தேர்ச்சி பெற வேண்டும்.

பணிவரன்முறைப்படுத்தியது சார்பாக பதிவுகளை சம்பந்தப்பட்ட தனியரது பணிபதிவேட்டில் உடனடியாக பதிவுகள் மேற்கொள்ள வேண்டும்.

மேற்படி இந்த உத்தரவுடன் பணிபதிவேட்டினையும், பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதல் சமர்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : கல்விச்சான்றுகள் அசல் மற்றும் பணிப்பதிவேடு.

முதன்மைக் கல்வி அலுவலர்,
உதகமண்டலம் , நீலகிரி.

பெறுநர்

செல்வி.சு.சுரேகா,
இளநிலை உதவியாளர்(அலுவலர் மூலம்),
வட்டாரக் கல்வி அலுவலகம், கோத்தகிரி

நகல் – வட்டாரக் கல்வி அலுவலர், கோத்தகிரி, நீலகிரி

நகல் – உபரி நகல் 1.